| 24.02.2023 | 873. | நமக்கு நாமே திட்டம் 2021—22ன் கீழ் இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 4 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்வதற்கு 15.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதனை மாநில அளவில் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான விளம்பர கட்டணம் ரூ.4,253/—ஐ (ரூபாய் நான்காயிரத்து இருநூற்றி ஐம்பத்தி மூன்று மட்டும்) வழங்கக்கோரி M/s. Sudha Ads, Tirupur என்ற நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி விளம்பரக் கட்டணம் ரூ.4,253/—ஐ (ரூபாய் நான்காயிரத்து இருநூற்றி ஐம்பத்தி மூன்று மட்டும்) அங்கீகரிக்கவும், தொகையினை விளம்பர நிறுவனத்திற்கு வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><u>அலுவலக குறிப்பு:</u><br>1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான விளம்பர கட்டணத்தை 2022—23ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.14511/2022/எம்சிஇ5) | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |
| 24.02.2023 | 874. | இம்மாநகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நமக்கு நாமே திட்டம் 2022—23ன் கீழ், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.18698/2021/தி2, நாள்.14.03.2022ன்படியும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.8880/2022/P1, நாள்.06.12.2022ன்படியும், 6 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ள ரூ.325.00/— இலட்சத்திற்கு (ரூபாய் முன்னூற்றி இருபத்தைந்து இலட்சம் மட்டும்) (மான்யம் ரூ.216.67/— இலட்சம் + பங்களிப்பு தொகை ரூ.108.33/— இலட்சம்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே கீழ்கண்டவாறு உள்ள பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலுக்கு. | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | மானியத் தொகை (ரூ.இலட்சத்தில்) | பொதுமக்கள் பங்களிப்பு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | Construction of storm water drain at west main street (west side Ch 327 – 532) | 58.00 | 38.67 | 19.33 |
| 2. | Construction of storm water drain at west main street (west side Ch 532 - 738) | 57.00 | 38.00 | 19.00 |
| 3. | Construction of storm water drain at west main street (west side Ch 738 - 918) | 50.00 | 33.33 | 16.67 |
| 4. | Construction of storm water drain at west main street (west side Ch 586- 791) | 58.00 | 38.67 | 19.33 |
| 5. | Construction of storm water drain at South street (North side Ch -0-175, 265-290) | 57.00 | 38.00 | 19.00 |
| 6. | Construction of storm water drain at South street (North side Ch -415-435, 630-740) | 45.00 | 30.00 | 15.00 |
| **Total** | | **325.00** | **216.67** | **108.33** |

அலுவலக குறிப்பு:-

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியினை 2022–23ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து நமக்கு நாமே திட்டம் 2022–23 திட்டநிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொள்ள மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.13650/2022/எம்சிஇ5)

24.02.2023

875. தஞ்சாவூர் மாநகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திரு சிவா/முருகேசன் என்பவர் தமது குடும்ப சூழ்நிலையின் காரணமாகவும், தனது மனைவிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும் அருகில் இருந்து கவனிக்க வேண்டியுள்ளதால் தமது சொந்த ஊரான ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு பணி மாறுதல் கோரியுள்ளதன் அடிப்படையில் அன்னாரை ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு (அயற்பணியில்) மாற்றம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.16211/2022/எச்4)

அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது

<table>
<tr><td>24.02.2023</td><td>876.</td><td>இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 1 முதல் 51 வரையிலான வார்டுகளில் டெங்கு காய்ச்சல் மற்றும் கொரோனா நோய் தொற்று தடுப்பு பணி தொடர்பாக தினசரி வீடு வீடாக சென்று கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளும் 210 எண்ணிக்கையிலான DBC பணியாளர்களின் அன்றாட பணிகளை Personal Tracking Sim பொருத்தி கண்காணித்திட குறைந்த விலைப்புள்ளி அளித்த Softberry Solutions, Coimbatore நிறுவனத்திற்கு ஒப்பந்தப்பணி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது இதற்கான ஒப்பந்தகாலம் 26.12.2022ல் முடிவடைவதால் இப்பணியின் அவசியம் கருதி மேலும் மூன்று மாதங்களுக்கு (27.12.2022 முதல் 26.03.2023 வரை) நீட்டிப்பு செய்திடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.2,65,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரம் மட்டும்)–க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.9433/2021/எச்.8)</td><td>அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது</td></tr>
<tr><td>24.02.2023</td><td>877.</td><td><u>மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்</u><br>தஞ்சாவூர் மாநகரம் பழமையும், புராதானமும் கொண்டு கோயில் நகரமாகும். இம்மாநகர மக்களின் நலன் கருதி கீழ்கண்டவாறு நீடிப்பு இரயில் சேவை மற்றும் புதிய இரயில் சேவைகளை வழங்கிட பொது மக்கள் கோரிக்கை விடுத்த வண்ணம் உள்ளனர்.<br><u>நீடிப்பு இரயில் சேவை</u><br><table><tr><th>வ. எண்</th><th>வண்டி எண்</th><th>தடத்தின் விபரம்</th></tr><tr><td>1</td><td>22627</td><td>திருச்சி To திருவனந்தபுரம் இண்டர்சிட்டி விரைவு வண்டியை தஞ்சாவூர் வரை நீடிப்பு செய்து தர வேண்டும்.</td></tr><tr><td>2</td><td>16843</td><td>திருச்சி To பாலக்காடு விரைவு வண்டியை தஞ்சாவூர் வரை நீடிப்பு செய்து தர வேண்டும்.</td></tr><tr><td>3</td><td>12664</td><td>திருச்சி To ஹவுரா விரைவு வண்டியை (வாரத்தில் இரு முறை இயக்கம்) தஞ்சாவூர் வரை நீடிப்பு செய்து தர வேண்டும்.</td></tr></table></td><td>தீர்மானத்தில் தஞ்சாவூர் – தாம்பரம் / சென்னை எக்மோருக்கு (கும்பகோணம் வழியாக) இன்டர்சிட்டி ரயில் சேவையை அறிமுகப் படுத்திடவும் மற்றும் தஞ்சாவூர்– பட்டுக்கோட்டை புதிய வழித்தடத்தை விரைவாக முடிக்க தேவையான நிதி ஒதுக்கீடு மற்றும் கார்டு லைனை இணைக்கும் வகையில் அரியலூர் வரை வழித்தடத்தை நீட்டித்து தந்திடவும் ஆகிய இரண்டு கோரிக்கைகளையும் சேர்த்து இத்தீர்மானம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் பேராதரவுடன் ஏகமனதாக நிறைவேறியது.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>

<u>புதிய இரயில் சேவை</u>

| வ. எண் | வண்டி எண் | தடத்தின் விபரம் |
|---|---|---|
| 1 | – | தஞ்சாவூர் To சென்னை பகல் நேர அதிவிரைவு வண்டி காலை 6.30 மணி முதல் 6.45 தஞ்சாவூரில் இருந்து புறப்பட்டு சென்னை சென்றடைதல் |
| 2 | – | மேற்கண்ட அதே வண்டியை சென்னை To தஞ்சாவூர் பகல் நேர அதிவிரைவு வண்டி மதியம் 2.15 மணி முதல் 2.30 சென்னையில் இருந்து எடுத்து தஞ்சாவூரில் சென்றடைதல் |
| 3 | – | மதுரை To காசி விரைவு வண்டியை தஞ்சாவூர் வழியாக இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

மேலும் கடந்த 45 வருடங்களாக தஞ்சாவூரையும், அரியலுரையும் இணைக்கும் வகையில் உத்தேசமாக 45 கி.மீ. தூர இரயில் பாதையை அமைக்க 2018ஆம் ஆண்டு தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டது.

மேலும் நாகப்பட்டினத்திலிருந்து இரயில் மூலம் எடுத்து வரப்படும் நிலக்கரி தற்சமயம் 150 கி.மீ. தூரம் சுற்றி திருச்சி வழியாக அரியலூர் சென்று பின் சென்னை கொண்டு செல்லப்படுகிறது. இதனை மாற்றி தஞ்சாவூர், அரியலூர் இரயில் தடம் அமைப்பதன் மூலம் இந்த 150 கீ.மீ. தூரம் சுற்றிச் செல்வது குறைக்கப்படும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள கும்பகோணத்தில் வரும் 2028ம் வருடம் மகாமகம் திருவிழா நடைபெறவிருக்கிறது. இவ்விழாவிற்கு இந்தியா முழுவதிலும் இருந்து ஏறக்குறைய 15 இலட்சம் முதல் 20 லட்சம் பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே மேற்கண்ட நிகழ்வுகளை கருத்தில் கொண்டு மேற்கண்ட இரயில் சேவை நீட்டிப்பு, புதிய இரயில் சேவைகள் மற்றும் தஞ்சாவூர், அரியலூர் இரயில் பாதை அமைப்பது ஆகிய பணிகளை தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் உதவியுடன் தேவையான நிதியை பெற்று, தஞ்சை மாநகர மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிட இரயில்வே துறையை கேட்டுக்கொள்ள தீர்மானம் நிறைவேற்றிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

</td><td></td></tr>
<tr><td>24.02.2023</td><td>

**878.** திருமதி அஞ்சுகம் பூபதி, துணை மேயர் அவர்கள் கொடுத்துள்ள தீர்மானம்

51வது வார்டுக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் உள்ள பாதாள சாக்கடை ஆள் இறங்கும் குழிகளின் மேல் மட்டத்தை உயர்த்தி அமைத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

</td><td>முன் மொழிந்தவர் :<br>திருமதி அஞ்சுகம் பூபதி<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி க.மரகதம்<br>நிறைவேறியது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 24.02.2023 | 879. | திரு எஸ்.செந்தமிழ்செல்வன், 1வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>1வது வார்டில் உள்ள (1) பள்ளியக்கிரஹாரம் ஜம்பு காவேரி சாலை (வாட்டர் டேங்க் பின்புற சந்து) (2) பள்ளியக்கிரஹாரம் மேலத்தெருவில் உள்ள சந்து (பிள்ளையார்கோவில் அருகில்) (3) பள்ளியக்கிரஹாரம் பஞ்சநாதம் பிள்ளை சந்து (4) வெண்ணாற்றாங்கரை ஆனந்தவள்ளியம்மன் கோவில் முன்புறம் மற்றும் ஆனந்தவள்ளியம்மன் கோவில் வடக்கு தெருக்களில் பேவர் பிளாக் சாலைகள் அமைத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு எஸ்.செந்தமிழ் செல்வன்<br>வழி மொழிந்தவர் :<br>திரு க.அய்யப்பன்<br>நிறைவேறியது |
| 24.02.2023 | 880. | திருமதி இ.சுமதி, 4வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>4வது வார்டு ராஜாராம் மடத்தெருவிற்கு மழைநீர் வடிகாலுடன் கூடிய தார் சாலை அமைத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமதி இ.சுமதி<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி கா.ரேவதி<br>நிறைவேறியது |
| 24.02.2023 | 881. | திருமதி பி.ஆக்னஸ்மேரி, 6வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>6வது வார்டு கல்லறை மேட்டுத்தெருவில் பழுதான கழிவு நீர் ஓடையை உயர்த்திக் கட்டிட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமதி பி.ஆக்னஸ்மேரி<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி தூ.சுகந்தி<br>நிறைவேறியது |
| 24.02.2023 | 882. | திரு சு.முகம்மது சுல்தான் இப்ராஹிம், 8வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>8வது வார்டுக்குட்பட்ட வடக்கலங்கம் தண்ணீர் டேங்க் அருகில் உள்ள பொதுக்கழிப்பிடத்தை பராமரிப்பு பணிகள் செய்து புதுப்பித்திடவும் மற்றும் வடக்கு வீதியின் சிறிய சந்துக்கு புதிய நடைபாதை அமைத்திடவும் தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு சு.முகம்மது சுல்தான் இப்ராஹிம்<br>வழி மொழிந்தவர் :<br>திரு ச.விஜயபாபு<br>நிறைவேறியது |
| 24.02.2023 | 883. | திரு ஜி.ஆனந்த், 9வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>9வது வார்டுக்குட்பட்ட பாலோபநந்தவனம் கே.பி.எஸ்.நகர் பகுதியில் ஐந்து தெரு விளக்கு அமைக்க புதிய மின் கம்பிகள் அமைத்து தெரு விளக்கு வசதி செய்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு ஜி.ஆனந்த்<br>வழி மொழிந்தவர் :<br>திரு S.பாலசுப்ரமணியன்<br>நிறைவேறியது |
| 24.02.2023 | 884. | திரு டி.சந்தானகிருஷ்ணன், 24வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>24வது வார்டில் உள்ள சக்காநாயக்கன் தெருவில் ஆழ்குழாய் கிணறு மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு டி.சந்தான கிருஷ்ணன்<br>வழி மொழிந்தவர் :<br>திரு M.தமிழ்வாணன்<br>நிறைவேறியது |

| | | | |
|---|---|---|---|
| 24.02.2023 | 885. | திருமதி எ.ஸ்டெல்லா நேசமணி, 29வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>29வது வார்டுக்குட்பட்ட பகுதியில் ஒரு நூலகமும், மிஷன் சர்ச் ரோடு, மிஷன் ஆலமரத்தெரு, சின்னையாபாளையம் ரோடு சந்திக்கும் நான்கு வழிச்சாலையில் ஒரு காவல்துறை கண்காணிப்பு அறை அமைத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமதி எ.ஸ்டெல்லா நேசமணி<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி அ.ஜெஜலெட்சுமி<br>நிறைவேறியது |
| 24.02.2023 | 886. | திரு யு.என்.கேசவன், 30வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>30வது வார்டுக்குட்பட்ட சிவன் கோவில் புதுத்தெரு வாய்க்காலை தூர்வாரி சுத்தம் செய்திடவும், பாலம் புதுப்பித்து கட்டிடவும், பட்டுநூல் கீழராஜ வீதியில் பழுதடைந்துள்ள பாலத்தை புதிதாக கட்டிடவும், வாணக்காரத்தெரு சௌராஷ்ரா பட்டுநூல் கீழராஜ வீதியில் பாதாள சாக்கடையை இணைக்கும் பாலத்தை சரி செய்திடவும் தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு யு.என்.கேசவன்<br>வழி மொழிந்தவர் :<br>திரு ஜே.வி.கோபால்<br>நிறைவேறியது |
| 24.02.2023 | 887. | திரு சு.செந்தில், 34வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>34வது வார்டுக்குட்பட்ட ஆடக்காரத்தெருவில் அமைந்துள்ள மயானத்தில் பொது மக்கள் பயன்பெறும் வகையில் காத்திருப்போர் கூடம், மினி ஹைமாஸ்ட் லைட் மற்றும் ஆழ்குழாய் கிணறு வசதியும், அதில் உள்ள குளத்தினை தூர்வாரி சிமெண்ட் சிலாப் மற்றும் படித்துறை, சுற்றுச்சுவர்கள் அமைத்திடவும் தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு சு.செந்தில்<br>வழி மொழிந்தவர் :<br>திரு டி.லெனின்<br>நிறைவேறியது |
| 24.02.2023 | 888. | திருமதி ரா.தமிழரசி, 37வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>37வது வார்டில் அரசினால் கலைஞர் உணவகம் அமைத்திடும் சமயம் உழவர் சந்தை பகுதியில் ஒன்று அமைத்திடவும் மற்றும் பாத்திமா நகர் நேதாஜி சாலையில் மழை நீர் வடிகால் கட்டிடவும் தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமதி ரா.தமிழரசி<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி ச.ரம்யா<br>நிறைவேறியது |
| 24.02.2023 | 889. | திருமதி ஜி.சுகந்தா, 44வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>44வது வார்டில் உள்ள சிவாஜி நகர் சாலையில் பழுதடைந்துள்ள குறுக்குப் பாலத்தை அகற்றிவிட்டு புதிய பாலம் கட்டிட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமதி ஜி.சுகந்தா<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி மா.உஷா<br>நிறைவேறியது |
| 24.02.2023 | 890. | திரு ஜி.கலையரசன், 46வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>46வது வார்டில் உள்ள மாணிக்கம் நகர், அதன் விரிவாக்கம் மற்றும் அதனை சுற்றியுள்ள குறுக்கு சாலைகளில் அமைந்துள்ள 4 தெருக்களின் சாலைகளை தார் சாலைகளாக அமைத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு ஜி.கலையரசன்<br>வழி மொழிந்தவர் :<br>திரு ஜெ.சரீப்<br>நிறைவேறியது |

| | | | |
|---|---|---|---|
| 24.02.2023 | 891. | திரு ஜெ.சரீப், 47வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>47வது வார்டில் உள்ள மானோஜிப்பட்டி சாலை, அண்ணா நகர் 2–ம் தெரு மற்றும் அண்ணா நகர் 3–ம் தெருக்களின் பழுதடைந்துள்ள சாலைகளை செப்பனிட்டு தார் சாலைகள் அமைத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு ஜெ.சரீப்<br>வழி மொழிந்தவர் :<br>திரு ஜி.கலையரசன்<br>நிறைவேறியது |
| 24.02.2023 | 892. | திருமதி சர்மிளாதேவி ராஜா, 48வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்<br>48வது வார்டுக்குட்பட்ட பெரியார் நகர் 1வது தெரு, 2ம் தெரு, 3ம் தெரு ஆகிய தெருக்கள் மற்றும் அபிராமபுரம் முதல் பெரியார் நகர் 4ம் தெரு வரை உள்ள குறுக்கு ரோடுகளுக்கும் தார் சாலைகள் அமைத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது | முன் மொழிந்தவர் :<br>திருமதி சர்மிளாதேவி ராஜா<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி P.டெய்சிராணி<br>நிறைவேறியது |

நாள் : 28.02.2023 ஒம்./ சண்.இராமநாதன்,
இடம்: தஞ்சாவூர். மேயர்.

// உண்மை நகல் //

**மேயர்,**
தஞ்சாவூர் மாநகராட்சி.

பெறுநர்

1) மாவட்ட ஆட்சித்தலைவர், வளர்ச்சி பிரிவு, தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–600 028 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3) உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, உடன் தணிக்கை பிரிவு, தஞ்சாவூர் மாநகராட்சி.

நகல் உதவி திட்ட அமைப்பாளர், தஞ்சாவூர் மாநகராட்சி (மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய)
„ சி5–மாமன்றக்கூட்ட எழுத்தர்.
„ அலுவலக விளம்பர பலகை.

## தஞ்சாவூர் மாநகராட்சி

**மாமன்றக் கூட்ட தீர்மான நகல்**

| Date of Meeting | Serial Number and subject in the Agenda (URGENT MEETING) | Decision of the City Corporation |
|---|---|---|
| 24.02.2023 | **893.** தஞ்சாவூர் மாநகராட்சி வரி வசூலை மேம்படுத்தவும், பொது மக்களின் நலன் கருதியும் இம்மாநகராட்சி வார்டு 51 மன்னர் சரபோஜி அரசு கலைகல்லூரியின் எதிர்புறம் அமைந்துள்ள குறிஞ்சி நகர், புதிய வீட்டு வசதி வாரியத்தில் உள்ள மாநகராட்சி சுற்றுசூழல் பூங்காவின் ஒரு பகுதியில் புதிதாக வரிவசூல் மையம் அமைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.986/2023/எம்சிஏ3) | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது |
| 24.02.2023 | **894.** மாநகராட்சிக்கு சொந்தமான காந்திஜி வணிக வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள தெற்கு புற கட்டிடத்திற்கு 09.01.2023 அன்று நடைபெற்ற மூன்றாவது பொது ஏலத்தில் திரு பிரபாகரன் வீரராஜ் என்பவரால் கட்டிடத்திற்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக மாத வாடகை ரூ.6,00,000/–க்கு கோரியுள்ளார். மேற்படி கட்டிடத்திற்கான பொது ஏல பொறுப்புத் தொகையாக ரூ.1,00,00,000/– செலுத்தியுள்ளார். மேற்படி உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியை மாநகராட்சி பொது ஏல விதிகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்படி நபருக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.10849/2022/எம்சிஏ3) | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது |
| 24.02.2023 | **895.** மாநகராட்சிக்கு சொந்தமான காந்திஜி வணிக வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள வடக்கு புற கட்டிடத்திற்கு 23.01.2023 அன்று நடைபெற்ற நான்காவது பொது ஏலத்தில் Vennila Clothing Company சார்பாக மேற்படி கட்டிடத்திற்கு வரப்பெற்ற உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக மாத வாடகை ரூ.6,00,000/–க்கு கோரியுள்ளார். மேற்படி கட்டிடத்திற்கான பொது ஏல பொறுப்புத் தொகையாக ரூ.1,00,00,000/– மேற்படி நிறுவனத்தால் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியை மாநகராட்சி பொது ஏல விதிகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்படி நபருக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.10849/2022/எம்சிஏ3) | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது |

**24.02.2023** **896.** தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள திருவள்ளுவர் வணிக வளாகம், காந்திஜி சாலையில் அமைந்துள்ள காந்திஜி வணிக வளாகம் மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள மாநாட்டு அரங்கத்திற்கு 08.09.2022 மற்றும் 08.11.2022 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட வகையில் விளம்பரம் செய்த வகையில் விளம்பர நாளிதழ்கள் இருந்து குறித்து வரப்பெற்று பட்டியல் தொகை கீழ்கண்டவாறு தினசரி நாளிதழ் நிறுவனத்திற்க்கு வழங்கிட கோரப்படுகிறது.

| வ. எ ண் | தினசரி நாளிதழின் பெயர் | தினசரி நாளிதழின் பெயர் | பட்டியல் எண் | விளம்பர கட்டணம் ரூ. | சேவை வரி | கூடுதல் |
|---|---|---|---|---|---|---|
| 1 | திருவள்ளுவர் வணிக வளாகம், காந்திஜி சாலையில் அமைந்துள்ள காந்திஜி வணிக வளாகம் மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள மாநாட்டு அரங்கம் | தினகரன் நாளிதழ் | 3300374180 | 43200 | 2160 | 45360 |
| 2 | திருவள்ளுவர் வணிக வளாகம், காந்திஜி சாலையில் அமைந்துள்ள காந்திஜி வணிக வளாகம் மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள மாநாட்டு அரங்கம் | தினந்தந்தி நாளிதழ் | 2223TNJ 271013318 | 41475 | 2073.76 | 43548.76 |
| கூடுதல் | | | | | | 88908.76 |

எனவே, மேற்கண்ட தொகை ரூ.88,908.76/-ஐ சம்மந்தப்பட்ட நாளிதழ்களுக்கு வழங்கிடவும் இதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை 2022–2023 –ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிடலாம்.
3. அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி தொகையினை தினசரி நாளிதழ் நிறுவனத்திற்கு வழங்கிட மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.10849/2022/எம்சிஏ5)

அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது

**24.02.2023** **897.** தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள சரபோஜி சந்தை கடைகளுக்கு மாமன்ற தீர்மானம் எண்.234, நாள்.31.08.2021ன்படி 23.09.2021 முதல் தொடர்ந்து நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் விடப்பட்டதில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்கு வரப்பெற்ற ஏலப்பதிவேட்டின்படி உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியினை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எ ண்</th><th>இனம் பெயர்</th><th>ஏலதாரர்/ ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி (திருவாளர்கள்)</th><th>ஏலக் கேள்வி ரூ.</th><th>ஒப்பந்தப் புள்ளி ரூ.</th><th>வைப்புத் தொகை</th><th>12 மாத வைப்புத் தொகை</th></tr>
<tr><td>1</td><td>“B” பிளாக் கடை எண்.87</td><td>ஏ.கௌஷெரிப்,<br>எண்.1056, பழைய மீன் மார்க்கெட்,<br>கீழவாசல், தஞ்சாவூர்.</td><td>15,000</td><td>–</td><td>1,00,000</td><td>1,80,000</td></tr>
<tr><td>2</td><td>“B” பிளாக் கடை எண்.135</td><td>ப.யாசர் அரபாத்<br>எண்.11/1097, ஆட்டுமந்தை முஸ்லீம் தெரு, கீழவாசல், தஞ்சாவூர்.</td><td>12,000</td><td>–</td><td>1,00,000</td><td>1,44,000</td></tr>
<tr><td>3</td><td>“B” பிளாக் கடை எண்.136</td><td>ப.யாசர் அரபாத்<br>எண்.11/1097, ஆட்டுமந்தை முஸ்லீம் தெரு, கீழவாசல், தஞ்சாவூர்.</td><td>9,000</td><td>–</td><td>1,00,000</td><td>1,08,000</td></tr>
<tr><td>4</td><td>“B” பிளாக் கடை எண்.137</td><td>ப.யாசர் அரபாத்<br>எண்.11/1097, ஆட்டுமந்தை முஸ்லீம் தெரு, கீழவாசல், தஞ்சாவூர்.</td><td>9,000</td><td>–</td><td>1,00,000</td><td>1,08,000</td></tr>
<tr><td>5</td><td>“B” பிளாக் கடை எண்.197</td><td>பி.வினிதா,<br>எண்.413, கீழவீதி, கொடிமரத்து மூலை, தஞ்சாவூர்.</td><td>9,000</td><td>–</td><td>1,00,000</td><td>1,08,000</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :</u><br>
மேலே கலம் 4–ல் கண்டுள்ளவர்களின் உயர்ந்த ஏலக்கேள்வி மற்றும் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகையினைஉறுதி செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.10497/2021/எம்சிஏ5)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>24.02.2023</td>
<td>898. தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட இடங்களில் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையம் (MCC Centre) செயல்பட்டு வருவதால், மேற்படி மையங்களுக்கு பாதுகாப்பு நலன்கருதி ஒரு மையத்திற்கு 2 கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) வீதம் 10 எண்ணிக்கையிலான மையத்திற்கு (20 கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) கொள்முதல் செய்து பொருத்தும் பணிக்கு 14.02.2023 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. அதில், குறைந்த விலைப்புள்ளிகள் அடிப்படையில் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் மேற்படி பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.2,60,000/–ஐ (ரூபாய் இரண்டு இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) அங்கீகரிக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.</td>
<td>பொருளில் வரிசை எண்.5ல் கண்டுள்ள இடம் வார்டு எண்.15 என்ற திருத்தத்துடன் அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்</th><th>வார்டு எண்</th><th>அமைய பெற உள்ள இடம்</th></tr>
<tr><td>1.</td><td>3</td><td>ஏ.எஸ்.அன்பழகன் நகர்</td></tr>
<tr><td>2.</td><td>7</td><td>ராஜாகோரி இடுகாடு மையம்</td></tr>
<tr><td>3.</td><td>13</td><td>சாலக்காரத்தெரு, STP Site</td></tr>
<tr><td>4.</td><td>7</td><td>AYA நாடார் ரோடு</td></tr>
<tr><td>5.</td><td>14</td><td>மீன்மார்க்கெட்</td></tr>
<tr><td>6.</td><td>38</td><td>ராஜீவ் நகர்</td></tr>
<tr><td>7.</td><td>47</td><td>கண்ணன் நகர் கிரவுண்ட்</td></tr>
<tr><td>8.</td><td>47</td><td>சாந்திவனம் இடுகாடு மையம்</td></tr>
<tr><td>9.</td><td>22</td><td>உரக்கிடங்கு</td></tr>
<tr><td>10.</td><td>22</td><td>உரக்கிடங்கு சீனிவாசபுரம்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
1. இப்பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2,60,000/—ஐ (ரூபாய் இரண்டு இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. மேற்கண்ட பணிக்கான செலவினை 2022—2023ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
3. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1088/2023/எம்சிஇ5)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>24.02.2023</td>
<td>899. தஞ்சாவூர் மாநகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019—20ம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட ஊரக முகமையின் தலைவர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு 15 இடங்களில் LED சிறுகோபுர மின்விளக்கு அமைக்கப்பட்டது. மேற்கண்ட LED சிறுகோபுர மின்விளக்கு அமைத்து ஒரு வருட காலம் முடிவடைந்துள்ளதால், ஏற்கனவே தஞ்சாவூர் மாநகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் M/S.சபரி எலக்ட்ரிகல்ஸ், சென்னை என்ற நிறுவனம் மூலம் 15 LED சிறுகோபுர மின்விளக்குகளையும் சேர்த்து பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2022—23ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
(ந.க.எண்.15030/2019/எம்சிஇ6)
</td>
<td>அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 24.02.2023 | **900.** இம்மாநகராட்சிக்கு சொந்தமான மாநகராட்சி புதிய அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள 160 KVA ஜெனரேட்டர் இரண்டாவது Oil Service செய்யும் பணிக்கு Kirloskar Auhorised Service Dealer ஆன Bharath Diesels, தஞ்சாவூர் என்ற நிறுவனத்திடமிருந்து முழுமையாக தொகை செலுத்தப்பட்ட பின்னரே பணி மேற்கொள்ளப்படும் என கடிதத்தில் தெரிவித்துள்ளபடியால், அதற்குண்டான கூடுதல் தொகை (உதிரி பாகங்கள் மற்றும் ஆயில் ரூ.10,613 + Labour Charges ரூ.2,360/–) ரூ.12,973/–ஐ (ரூபாய் பனிரெண்டாயிரத்தி தொள்ளாயிரத்தி எழுபத்தி மூன்று மட்டும்) பணியின் அவசர அவசியம் கருதி Kirloskar Auhorised Service Dealer ஆன M/s.Bharath Diesels, தஞ்சாவூர் என்ற நிறுவனத்திற்கு முன்பணமாக வழங்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><u>அலுவலக குறிப்பு:</u><br>1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினை 2022–2023 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி Kirloskar Auhorised Service Dealer ஆன M/s.Bharath Diesels, தஞ்சாவூர் என்ற நிறுவனத்திற்கு முன்பணமாக வழங்கியதையும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.6752/2021/எம்சிஇ6) | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |
| 24.02.2023 | **901.** தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட 51 வார்டுகளிலும் சுற்றித் திரியும் தெரு நாய்களால் பொது மக்களின் உயிருக்கு அச்சுறுத்தலாகவும் மற்றும் போக்குவரத்திற்கு இடையூராக உள்ளதாலும், பொது மக்களிடம் இருந்து தொடர்ந்து புகார்கள் அதிக அளவில் வருவதனாலும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடமிருந்து வரப்பெற்ற மின்னஞ்சல் கடிதத்தில், ROC NO:20383/2022/H1 நாள்: 19.12.2022 தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க இம்மாநகராட்சி பகுதிகளில் சுற்றி திரியும் தெரு நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த இம்மாநகராட்சி துப்புரவு ஆய்வர்களின் மூலம் கணக்கெடுப்பு (Dog Survey) நடத்தியதில் உத்தேசமாக 4000 நாய்கள் கண்டறியப்பட்டுள்ளன.<br>மேற்படி தெரு நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த விலங்குகள் நல வாரிய (AWB) வழிகாட்டுதலின்படி கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டு ரேபிஸ் வெறி நாய் தடுப்பூசி செலுத்தும் பணிகள் மேற்கொள்ளவும் மேலும் நாய்களை பிடித்து கருத்தடை செய்யும் இடத்திற்கு கொண்டு செல்வதற்கு இம்மாநகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் ஒன்றினை ஏற்கெனவே பணிக்கு பயன்படுத்தியதனை தற்போது அவ்வாகனத்தை புதுபித்து இப்பணிக்கு உபயோகபடுத்திடவும் அவ்வாகனத்திற்கு ஆகும் எரிபொருள் மற்றும் பராமரிப்பு ஆகிய செலவுகளை இம்மாநகராட்சி பொது நிதியில் பயன்படுத்திடவும் மற்றும் கீழ்கண்டுள்ள வழிகாட்டுதலை பின்பற்றி பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 1. இம்மாநகராட்சியில் மாநகர நாய்கள் மேலாண்மை குழுவில் (City Dog Management Committee) இம்மாநகராட்சி ஆணையரை தலைவராகவும் இம்மாநகராட்சி மாநகர்நல அலுவரை உறுப்பினர் செயலாளராகவும், கால்நடை துறை அறுவை சிகிச்சை மருத்துவரை பிரதிநிதியாகவும், அரசு சாரா அமைப்பினர் (NGO) மற்றும் விலங்குகள் தன்னார்வலர்களைக் கொண்டு குழு அமைத்திடவும் .<br>2. இம்மாநகராட்சி பகுதியான ராஜாக்கோரி இடுகாட்டில் நாய்களுக்கான கருத்தடை அறுவைச் சிகிச்சை ஏற்கனவே செய்யப்பட்ட கட்டிடம், மிகவும் பழுது அடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் அதனை புதுபித்திடவும் மற்றும் மேற்படி பணிக்கான புதிய கட்டிடம் ஒன்று கட்டிடவும் திட்டமிடப்பட்டு அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அனுமதி கோரப்பட்டுள்ளது. தற்போது மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதியும் மற்றும் மாவட்ட ஆட்சிதலைவர் அவர்களின் 15.02.2023 தேதிய நேரடி அறிவுரைக்கிணங்கவும் இம்மாநகராட்சி பகுதியின் மிக அருகாமையில் உள்ள மிருக வதை தடுப்பு சங்கத்தில் மேற்படி தெருக்களில் சுற்றி திரியும் தெரு நாய்களை இனப் பெருக்கக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை (Animal Birth Control) மற்றும் Anti Rabies Vaccine (ARV) செலுத்தும் பணி மேற்கெள்ளவும்.<br>3. அரசாணை எண் 181 நாள் 05.04.2013 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சென்னை அவர்களின் ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை ஏற்கெனவே மேற்கொண்டதில் அதில் விலங்குகள் நலவாரியத்திடம் இருந்து 50% மானியமாக பெற்றுக் கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக மேற்படி நலவாரியத்திடமிருந்து 50% மானியம் வரப்பெறாமல் உள்ளதனால், தற்போது மேற்கொள்ளப்படஉள்ள பணிக்கு முழு செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும். மேலும் விலங்குகள் நலவாரியத்திடம் 50% மான்யம் வழங்கிட கோரி அதற்கான மான்யம் பிரேரணைகள் (Grand Proposal) அனுப்பிடவும், அதன் மூலம் அதற்கான மான்யம் வரப்பெற்றால் இம்மாநகராட்சி பொது நிதியில் ஈடு செய்து கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது. | |

| | | |
|---|---|---|
| | <u>அலுவலக குறிப்பு</u><br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1177/2021/எச்8) | |
| 24.02.2023 | 902. <u>மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்</u><br>உலக பிரசித்தி பெற்ற தஞ்சை பெரிய கோயிலுக்கு நாள்தோறும் இந்தியா மட்டுமின்றி, உலக நாடுகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அதிக அளவில் வந்த வண்ணம் உள்ளனர். இதனால் போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் மற்றும் வாகனம் நிறுத்துவதற்கும் போதிய இட வசதி இல்லாமல் உள்ளது. ஏற்கனவே, ராஜா மிராசுதார் மருத்துவமனையின் ஒரு பகுதி வாகனம் நிறுத்துவதற்காக ஒதுக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. தற்போது போதிய இடவசதி இல்லாத காரணத்தால் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலை சரி செய்யவும், வாகனம் நிறுத்துவதற்கும் அருகில் உள்ள தனியாருக்கு சொந்தமான வார்டு 5, பிளாக் 4, நகரளவு எண்.26/1–ல் 19,000 சதுர அடி பரப்பளவு உள்ள இடத்தினையும் கட்டாய நில எடுப்பு மூலம் கையகப்படுத்தவும் மற்றும் அதற்குண்டான செலவின தொகையினை மாநகராட்சி ஏற்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>மாண்புமிகு மேயர்<br>திரு சண்.இராமநாதன்<br>வழி மொழிந்தவர் :<br>துணை மேயர்<br>திருமதி அஞ்சுகம் பூபதி<br>ஏகமனதாக நிறைவேறியது |

| | | | |
|---|---|---|---|
| 24.02.2023 | 903. | <u>மாண்புமிகு மேயர் அவர்கள் கொண்டு வந்துள்ள இரங்கல் தீர்மானம்</u><br>தமிழ்நாடு முன்னாள் வணிக வரித்துறை அமைச்சரும், தி.மு.கழக வர்த்தக அணித் தலைவருமான திரு S.N.M.உபயதுல்லா அவர்கள் 19.02.2023 அன்று இயற்கை எய்தினார்.<br>இவர் 1987 முதல் 2014 வரை 27 ஆண்டுகள் தஞ்சை நகரக் கழக செயலாளராகவும், நான்கு முறை தஞ்சாவூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த மக்கள் பணி ஆற்றியவர். கடந்த 2006–ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களது அமைச்சரவையில் வணிக வரித்துறை அமைச்சராக இடம் பெற்றவர். தனது இனிய பண்பாலும், கருணையாலும், எளிமையாலும் அனைவரையும் கவர்ந்தவர் ஆவார்.<br>இவரது கழகப்பணிகளையும், மக்கள் பணியையும், மொழிப்பற்றையும் சிறப்பிக்கும் வகையில் 2020–ஆம் ஆண்டு கழக முப்பெரும் விழாவில் **“கலைஞர் விருதினையும்”** இந்த ஆண்டு ஜனவரி மாதம் நடந்த அரசு விழாவில் தமிழ்நாடு அரசின் **“பேரறிஞர் அண்ணா விருதினையும்”** பெற்றவர் ஆவார்.<br>அன்னாரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினர், உறவினர்களுக்கு இம்மாமன்றத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம். | மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்திட ஏகமனதாக நிறைவேறியது |

நாள் : **28.02.2023** ஒம்./ சண்.இராமநாதன்,

இடம்: தஞ்சாவூர். மேயர்.

// உண்மை நகல் //

**மேயர்,**

தஞ்சாவூர் மாநகராட்சி.

பெறுநர்

1) மாவட்ட ஆட்சித்தலைவர், வளர்ச்சி பிரிவு, தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–600 028 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3) உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, உடன் தணிக்கை பிரிவு, தஞ்சாவூர் மாநகராட்சி.

நகல் உதவி திட்ட அமைப்பாளர், தஞ்சாவூர் மாநகராட்சி (மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய)

„ சி5–மாமன்றக்கூட்ட எழுத்தர்.

„ அலுவலக விளம்பர பலகை.